★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 19 ஸபர் 29 இதழ் 294

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-12-83

## திருமதி சிறிமாவோ: மீண்டும் குடியுரிமை?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு, சில தினங்களில் மீண்டும் குடியுரிமை வழங்கப்படலாம் என்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து இப்பொழுது அறியப்படுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைசம்பந்தமான சர்வகட்சி மகாநாடு இம்மாதம் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் விருப்பம் தெரிவித்துள்ளதுடன்; நிபந்தனை எதுவுமின்றி தமிழர் விடுதலைக்கூட்டணி இம்மகாநாட்டுக்கு அழைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதேநேரத்தில், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து உத்தேச சர்வகட்சி மாநாடு பற்றி கருத்து வெளியிட்டுள்ளதுடன்; திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயசகாவின் 'நிலை' குறித்தும் அவர் மாநாட்டில் பங்குபற்றவேண்டிய அவசியம் குறித்தும் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கலந்துகொள்வதற்கு இப்பொழுது தடைஎதுவும் இல்லை என்றாலும்; குடியுரிமை பெற்று பூரண அந்தஸ்த்துடன்பங்குபற்றுவதே சிறப்பாக இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சர்வகட்சி மாநாடு இம்மாதம் மூன்றும் வாரத்தில் கூட்டப்படுவதனால் அதற்கு முன்னர் திருமதிபண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

★ சர்வகட்சி மாநாட்டின் எதிரொலி:

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு?

(கொழும்பு)

திருகோணமலை உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில்இடைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து 'ஈழநாடு' அறிகிறது.

திருகோணமலையில் முதலிலும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனையதொகுதிகளில் பின்னரும் இடைத்தேர்தல்கள் நடைபெறும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், உத்தேச சர்வகட்சி மாநாட்டின் எதிரொலியாக இந்த இடைத்தேர்தல்கள், திட்டமிட்டபடி நடைபெறமாட்டாது என்று அறியப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டின் விளைவுகளைப் பொறுத்தே இந்த இடைத்தேர்தல்களும் பின்னர் நடக்கலாம் என்று கூறப்படுகிறது.

## 3 கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்தனர்

(கொழும்பு

உத்தேச சர்வகட்சி மாநாடு குறித்து ஜனாதிபதியை நேற்று மூன்று அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்துக்கருத்துப் பரிமாறினர்.

கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமாஜகட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி ஆகியவற்றின் தலைவர்களே நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார்கள். இச்சந்திப்பில் சர்வகட்சி மாநாட்டில் கூட்டணியின் பங்கு குறித்து இவர்கள் வலியுறுத்தியதாக அறியப்படுகிறது.

## "நாட்டில் நிலைமை சீராகவில்லை பழைய இடங்களுக்குச் செல்லுமாறு ஆசிரியர்களை வற்புறுத்தக்கூடாது"

### இ. ஆ. ச. பொதுச்செயலாளர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''நாட்டில் நிலைமை இன்னும் சீராகவில்லை. பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வடபகுதிக்கு வந்த தமிழ் ஆசிரியர்களை பழைய இடங்களுக்கு செல்லுமாறு வற்புறுத்தக்கூடாது. அவர்களுக்கு நவம்பர் மாதத்திலிருந்து 3 மாதங்கள் விசேட லீவு வழங்குவதுடன் இடம்பெயர்ந்து வந்திருக்கும் இடத்தில் சம்பளமும் வழங்க வேண்டும்''.

வடமாகாண ஆசிரியர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எச்.என். பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நகரிலுள்ள வடமாகாண ஆசிரியர் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. மு. தியாகராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. பெர்னாண்டோமேலும் கூறியதாவது:

''எந்தவித நிபந்தனையுமின்றி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீரிக்கப்படவேண்டும் பெரும்பான்மை மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் எந்தபிரச்னையும் இருக்காது. பல்கலைக்கழக மாணவர்கள் திறமை அடிப்படையிலே தெரிவு செய்யப்படவேண்டும். இவர்களுக்கு அளிக்கப்படும்சலுகைவருமான அடிப்படையிலேயே இருக்கவேண்டுமென்றும்இனரீதியில் அல்லது பிரதேச ரீதியில் இருக்கக்கூடாது''. (க)

## போராட்டத்தைகைவிட்டால் பொதுமன்னிப்பு?

(கொழும்பு)

இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் அக்கறை கொண்டிருக்கும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தீவிர வாதத் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும் பட்சத்தில் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கத் தயாராக இருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டின் மூலம் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதன் ஒரு அங்கமாக, ஆயுதப் போராட்டத்தை தீவிரவாத தமிழ் இளைஞர்கள் கைவிட்டால் இப்போது மன்னிப்பு வழங்கப்படும் என்று மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

G. C. E. (A/L)

விஞ்ஞானம்

பகல் நேர வகுப்பு
2-ம் பிரிவு ஆரம்பம்
இன்று 5-12-83

வார நாட்கள் ஐந்தும்

| | | |
|---|---|---|
| 1-45 | விலங்கியல் | நாகநாதன் |
| 2-45 | தாவரவியல் | ரவிகுமார் |
| 3-45 | இரசாயனம் | ஜெகன் |
| 4-45 | பௌதிகம் | வர்ணம் |
| 10-00 | பிரயோக கணிதம் | கிருஷ்ணு |
| 11-00 | தூய கணிதம் | கிருஷ்ணு |

MASTER
INSTITUTES
B. M. C. Lane-Jaffna.

10313

சர்வகட்சி மாநாடு:

## "தீவிரவாத தமிழ் இளைஞர்களின் தலைவர்களும் அழைக்கப்பட வேண்டும்"

### ஜனாதிபதி - குமார் சந்திப்பு

(கொழும்பு)

''சர்வகட்சி மாநாட்டிற்கு தீவிரவாதத் தமிழ் இளைஞர்களின் தலைவர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், ஏனெனில் அவர்களதுஒத்துழைப்பின்றி எந்தத் தீர்வும் நிலைத்து நிற்கமுடியாது.''

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார்பொன்னம்பலம், ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவிடம், சர்வகட்சி மாநாடு தொடர்பாக நேற்று முன்தினம் சமர்ப்பித்த ஏழு அம்சகோரிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அழைப்பின் பேரில், அவரின் வாட் பிளேஸ் இல்லத்தில் திரு. குமார்பொன்னம்பலம், அவரைச் சந்தித்தார். இச்சந்திப்பின் போது தமிழ்க் காங்கிரஸ் உபதலைவா திரு. மோதிலால் நேருவும் கலந்து கொண்டார்.

இசசந்திப்பின்போது தீவிரவாத இளைஞர்களுடன், அமைச்சர் திரு. தொண்டமானைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவிட வேண்டுமென்றும், அல்லது வேறு நம்பிக்கையானவர்களைத் தீவிரவாத இளைஞர்களுடன் பேச்சுநடத்தவிடவேண்டுமென்றும், தமிழர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண தீவிரவாத இளைஞர்களுடன் பேச்சு நடத்தவேண்டியது அவசியம் என்றும் திரு. குமார் பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

அவர் சமர்ப்பித்த ஏழு அம்சகோரிக்கை வருமாறு:

''தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை எந்த நிபந்தனையுமின்றி சர்வகட்சி மாநாட்டிற்கு அழைக்க வேண்டும்.''

''இந்தியாவில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இலங்கை வருவதற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய்வீதி ஆனைக் கோட்டை 3ம் கட்டையில் 5 பரப்புக்காணி விற்பனைக் குண்டு. நேரடியாக தொடர்பு கொள்க. தொடர்பு: சி. மார்க்கண்டு. 399, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 10347

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து கால்மைல் தூரத்தில் சண்டிலிப்பாய் வீதியில் ஒரு பனங்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: S. A. பொன்னுத்துரை, சண்டிலிப்பாய்வீதி, பண்டத்தரிப்பு. 10345

வர்த்தகர்களே! படப்பிடிப்பாளர்களே! பாவனையாளர்களே! உங்களுக்குத் தேவையான கலர், கறுப்பு/ வெள்ளை பிலிம் சுருள்களை மலிவாகப் பெற்றுக்கொள்ள QUIKFOTO வை நாடுங்கள். மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவுண்டு. தொடர்பு QUIKFOTO இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு (சந்திக்கு அருகாமையில்) 10348

உங்களுக்குவேண்டிய National, Philips பாவனைப் பொருட்களை மலிவான விலையில் பெற எம்முடன் கலந்தாலோசியுங்கள் வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு. தொடர்பு: லங்கெக்ஸ்போ (Lankexpo) இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. 10349

வியாபாரிகளே! பாவனையாளர்களே! உங்களுக்குத் தேவையான ''ஷொப்பிங் பாக்கை'' (Sopping Bags) மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ள லங்கெக்ஸ்போ ஸ்தாபனத்தாரை நாடுங்கள். உங்களின் தேவைக்கேற்ற டிசைன்களிலும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். ஆகக் குறைந்த ஓடர் 100 பைகள். ஏஜண்டுகள் தேவை நேரிலோ எழுத்திலோ தொடர்பு கொள்ளுங்கள்: லங்கெக்ஸ்போ (Lankexpo) இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. 10350

Imported - Bostik - இறக்குமதி செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற 'பொஸ்டிக்' பசை வகைகள் (Adhesives), மரம், Pvc, கண்ணாடி, தோல், மண் பாத்திரம், றப்பர், கடதாசி என்பவற்றை ஒட்டவும், வெடிப்புகளை நிரப்பவும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது! வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு, விநியோகஸ்தர்கள்: லங்கெக்ஸ்போ (Lankexpo) இருபாலை வீதி, கோண்டாவில். 10351

பளையில் 12 ஏக்கர் தென்னந் தோட்டமும் (காய்த்துக் கொண்டிருக்கும் இளங்கன்றுகள்), 3 ஏக்கர் நெற்காணியும் (மிளகாய், மற்றும் பயிர்களும் செய்யலாம்) அருகருகில் விற்பனைக்குண்டு. பெரிய கிணறும் உண்டு. விபரங்களுக்கு; அன்ரன் ஜயவேந்திரா, 34, கண்டிவீதி, மிருசுவில். (10308)

சாவகச்சேரி, கண்டி வீதியில் கைதடி நுணுவில் சந்திக்கு அண்மையில் 8 பரப்பும், 33 பரப்பும் கொண்ட இரு காணிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. அம்பிகைபாலன் ஜே. பி. யு. எம். சட்டத்தரணி, கண்டிவீதி, சாவகச்சேரி. தொலைபேசி; [262]. 10353

195வாடகைக்கு விடப்படும். இரும்புக்கதிரைகள் விற்பனைக் குண்டு. தொடர்பு: செ. கோபால் மெயின் வீதி, சங்கானை. 10361

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 25 ஸ்ரீ இலக்க டேவிற் பிறவுண் ட்ராக்டர் ரெயிலருடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ''சாயி மங்களா'', 60/5 இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை. யாழ்ப்பாணம். 10356

½ பரப்பு புதிய கட்டிடத்துடன் வீடு, A.P. லேனில் முஸ்லீம்வட்டாரத்தில் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அரிசிமுத்து 110, முஸ்லீம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 10354

நல்ல நிலையிலுள்ள 8 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ் ஒக்ஸ்போட்கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அரு. அம்பலவாணர் காட்டுப்புலம் தொண்டமனாறு. அல்லது சக்திவேல் மீனாட்சி அம்மன் கோவில்வீதி, வல்வெட்டித்துறை. 10363

நீர்வேலி இராசவீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: M. தங்கராசா 18, ஸ்ரேசன் றோட், சுன்னாகம். 10362

## தேவை

நாளாந்த கணக்கு எழுதத் தெரிந்தவரும், காசாளராக கடமையாற்றக்கூடிய பெண் ஊழியர் தேவை. போதிய சான்றிதழ்களுடன் சொந்தக் கையெழுத்தில் உடன்விண்ணப்பிக்கவும். ஞானந்தி பேணிச்சர்ஸ், 234/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10338

## பயிற்சி

மோட்டார் மெக்கானிஷம்-எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் பயிற்சிகள் 12-12-1983ல் ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியறிங் ரெக்னொலொஜி 11B மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10324

## வைத்தியம்

மனநோய், அல்சர், மூலம், சர்மரோகங்கள், நரம்புத் தளர்ச்சி எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தர வாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன் 218/5 பலாலி றோட், கந்தர்மடம். 10355

## சேவை

புதிய பழைய படங்கள் வெளிவந்துள்ளன. இன்றே அங்கத்துவம் பெறுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10269

10/7 சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியில் நான்கு அறை உள்ள வீடு விற்பனைக் குண்டு. மேல்காணும் விலாசத்தில் அல்லது R. ஜயேந்திரன், 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி. யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். 10270

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்த முறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். 10309

கொழும்புத்துறை யாழ்ப்பாண பிரதானவீதியில் கணக்கர் சந்திக்கருகாமையில் எண்ணூறு சதுர அடிகொண்ட நவீன வீடுகள் ஒன்றேகால் பரப்புக்காணிக்குள் அமைத்துக்கொடுக்கப்படும். நான்கு வீடுகளையும் தனித்தனியாக பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். ஸ்ரார் பில்டர்ஸ், 97, ஸ்ரேசன்றோட், யாழ்ப்பாணம். 10359

## கல்வி

Radio and Electronic Engineering (Special Course) கண்டிப்பாக A/L மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவார்கள். O/L மாணவர்கள் வயரிங் கல்வியுடன் சேர்ந்து சாதாரண பிரிவில் சேரலாம். மேலே குறிப்பிட்ட கலையை இங்கு பயில்வோர் வேறு கலைகள் இங்கு பயில அனுமதிக்கப்படமாட்டார்கள். மூன்று பொறியியலாளர்கள், ஒரு ரெக்னீசியன். Chief Engineer, K. Ceylon Muney உடன் தொடர்புகொள்க. பொறியியல் கல்வி நிலையம், (சாந்தி சினிமா அருகாமையில்) யாழ்ப்பாணம். 10304

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 1500திற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவு சீனி, கழிவு மாவும், வெற்று பரல்களும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி 9-12-83 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி.

பொதுமுகாமையாளர்.
1-12-1983 10358

**விக்ன** டியூசன் சென்றர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.நகர்.

மாணவர்களின் நலன்கருதி இவ்வாண்டு
**G.A.Q.** பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகின்றன.
(யாழ்.நகரில் பட்டப்படிப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒன்றுகூடி கற்பிப்பார்கள்)

தமிழ்:- குழந்தைவேல்
இ. நாகரிகம்:- காரை. சுந்தரம்பிள்ளை
புவியியல்:- குணராசா
அரசியல் விஞ்ஞானம்:- மஃறூப்
ஆங்கிலம்:- விஸ்வநாதன்

மு. குறிப்பு: 1. யாழ்.நகரில் இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறும்.
2. 15-12-83இற்கு முன் அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.
3. குறிக்கப்பட்டளவு மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

ஆரம்பம் | 1-1-84 | காலை 7மணி 10332

### உடன் ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு
அனுபவமுள்ள புளோவர் (BLOWERS)
கெல்ப்பர் (HELPERS) பபுளர் (BUBBLERS)
போன்றவர்களும்
அனுபவமுள்ள BOTTLE and PRESS MECHINE
இயக்குநரும், கெல்ப்பரும் தேவை.
அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
வேலை பழகுபவர்களும் தேவை.
உடன் நேரில் வரவும்.
சேவி கிளாஸ் அன் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி. (10281)

**SONY** அல்லது **NATIONAL**

தொலைக்காட்சிப் பெட்டி


**KENWOOD**

குளிர்சாதனப் பெட்டி

இரண்டு வருட இலகுவான தவணை முறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். உடன் பணம் செலுத்துபவர்கட்கு எம்மிடம் கூடுதலான கழிவு வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்.
**"SHABRA" Unico Finance Ltd.**
207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 22073

### 5-வது நினைவஞ்சலி



மங்கள மலர்வு: 24-08-1956

அகால உதிர்வு: 05-12-1978

**க. சச்சிதானந்தன்**

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. ம. கந்தையா தம்பதிகளின் அன்புமகன் அமரர் சச்சிதானந்தன் (R. P. C. 4943) அவர்களின் 5-வது ஆண்டு நினைவஞ்சலி.

அன்னாரின் குடும்பத்தினர்,
10368

### JAFFNA COLLEGE PUBLICATIONS

1. The Crisis in Modern Society - R. G. Saiyidain
2. Tamil Humanism-The Classical Period - Xavier S. Thaninayagam
3. Education and National Development - Malcolm S. Adeseshiah
4. Christianity Traditional Cultures and Nationalism (The South Asian Experience) - Sinnappah Arasaratnam
5. Reflections on the Humanities in a Democratic Culture - J. W. Bicknell

The above are available at Rs. 10/- each.

OTHER PUBLICATIONS

6. A History of Jaffna College (1923—1980) - S. Kulandran (Bishop) - Rs. 50/-
7. The Contribution made to Tamil by the American Missionaries who served in Ceylon (in Tamil)- S. Jebanesan - Rs. 20/-
8. Reprints of:-
   (i) J. V. Chelliah's "A Century of English Education," (History of Jaffna College and its predecessor Batticotta Seminary 1823—1923).
   (ii) Rev. C. D. Vellupillai's "History of American-Ceylon Mission" (in Tamil) will be available for sale soon.

All these available at Jaffna College.

PRINCIPAL.

JAFFNA COLLEGE:
Vaddukoddai. 10352

## யாஸீருக்கு விசுவாசமான வீரர்களை

# ஏற்றிச்செல்லும் கப்பல்களுக்கு ஐ.நா. கொடியை பறக்கவிட அனுமதி!

### ஐ. நா. பாதுகாப்புச்சபை வழங்கியது

பெய்ரூட், நவ. 4

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாஸீர் அரபாத்துக்கு விசுவாசமான பாலஸ்தீன வீரர்களை திரிப்பொலி நகரிலிருந்தும் ஏற்றிச் செல்லவுள்ள கப்பல்களுக்கு ஐ. நா. கொடியைத் தாங்கிச் செல்ல ஐ.நா.ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது.

தலைவர் அரபாத், ஐ. நா. விடம் தமது வீரர்களைக் கொண்டு செல்லவுள்ள கப்பல்களுக்கு ஐ. நா. கொடியைத் தாங்கும் அதிகாரம் தரப்பட வேண்டும் என விண்ணப்பித்திருந்தார். இவ்விண்ணப்பத்தை ஐ. நா. செயலாளர் பாதுகாப்புச்சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இறுதியாக இதுபற்றி நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே மேற்படி அனுமதி வழங்கப்பட்டது.

வடலெபனானின் திரிப்பொலி நகரிலிருந்தே யாஸீர் அரபாத்துக்கு விசுவாசமான பாலஸ்தீன வீரர்கள் லெபனானிலிருந்து வெளியேறியுள்ளனர். யாஸீர் அரபாத்துக்கு விசுவாசமான படைகளுக்கும், எதிரான பாலஸ்தீனப் படைகளுக்கு மிடையே கடந்த ஒரு மாத காலமாக லெபனானில் கடுஞ் சண்டை நிலவியது.

இச்சண்டையை முடிவுக்குக் கொண்டுவரவும், இவ்விரு அதிருப்தியாளரிடையேயும் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தவும் சிரியா, சவுதி அரேபியா ஆகியன கூட்டாக போர் நிறுத்த ஒப்பந்த மொன்றை முன்வைத்தன. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே பாலஸ்தீன இயக்கத்தின் அரபாத் விசுவாசிகள் லெபனானிலிருந்தும் வெளியேறவுள்ளனர்.

ஐந்து கப்பல்கள் இவர்களை ஏற்றிச்செல்லும் பணிகளுக்கென தயாராகவுள்ளன. எங்கு இவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள் என்பது பற்றி எதுவும் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் இவர்கள் டுனீசியா, அல்லது தென்யேமனுக்குக் கொண்டு செல்லப்படலாம் என ஊகங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

கடந்த ஆண்டு டிசம்பரிலும் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன இயக்க வீரர்கள் இஸ்ரேலின் வற்புறுத்தலின் பேரில் பெய்ரூட்டிலிருந்து கப்பல்களில் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. இம்முறை சுமார் 4 ஆயிரம் பாலஸ்தீன இயக்கவீரர்கள் வெளியேற்றப் படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

### ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6.00 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6.30 | 'சிம்ப்மேற்ஸ்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 7.00 | செய்திகள் (தமிழ்) |
| 7.14 | நானைய நிகழ்ச்சிகள் |
| 7.30 | யோகாசனப் பயிற்சிகள் |
| 7.45 | 'செவைவல்' - பென்குயின் பறவைகள்பற்றிய சித்திரம் |
| 8.15 | செய்திகள் (சிங்களம்) |
| 8.30 | தகவல் நிகழ்ச்சி |
| 9.00 | 'லவ் போட்' நகைச்சுவை நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 9.30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.50 | ''லவ் போட்' (தொடர்ச்சி) |

# இஸ்ரேல்இரட்டை வேடம்போடுகிறது

### ஜோர்தான் மன்னர் கவலை

அம்மான் நவ. 4

இஸ்ரேல் ஒரே நேரத்தில் சமாதானம் பற்றிப் பேசுவதுடன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் விரிவு படுத்துகிறது. அதன் இத்தகைய போக்கு அரபு நாடுகளுக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கிறது.''

இவ்வாறு ஜோர்தான் மன்னர் ஹுசைன் கூறினர். ஜோர்தானுக்கு துருக்கிய பிரதம மந்திரி உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். அவருக்கு நேற்று விருந்துபசார மொன்றையளித்துக் கௌரவித்த போதே மன்னர் ஹுசைன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னர் ஹுசைன் தொடர்ந்து கூறியதாவது: ''இஸ்ரேல் சமாதானம் பற்றியும் பேசுவதுடன் ஏககாலத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் விரிவுபடுத்துகிறது. அதன் இத்தகைய இரட்டைவேடம் அரபுநாடுகளுக்கு வேதனையையும், தலையிடியையும் கொடுக்கிறது. இஸ்ரேல் சமாதானம் பற்றி மட்டுமே பேசவேண்டும். அல்லது அதன்போக்கிற்கு ஆக்கிரமிப்பை மேற்கொள்ள வேண்டும். அப்போது ஏனைய நாடுகளுக்கு அதன் தன்மையை அறிந்து நடந்து கொள்ள முடியும். ஆனுல் இஸ்ரேல் ஒரு உறுதியான தன்மையின்றி தனது காரியங்களைச் சாதிக்கின்றது'' என்றூர்.

துருக்கிய பிரதமரும் இஸ்ரேலிய ஊடுருவல் ஆக்கிரமிப்புக்களை வெகுவாகக் கண்டித்து உரையாற்றினூர். இஸ்ரேல் அது கைப்பற்றியுள்ள பகுதிகளை விட்டுவெளியேற வேண்டுமென்று அவர் வலியுறுத்தினூர். (கி)

### இந்தக் காணிகளின் நிலை!

(கொழும்பு)

கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களிலுள்ள அரசாங்கக் காணிகளை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமாக்கப்படவுள்ளது.

இதற்காக துறைமுக அதிகாரசபை சட்டத்தில் திருத்தம் பாராளுமன்றத்துக்கு விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

இதன் பெருந்தொகைக் காணிகள் இச்சபைக்குச் சொந்தமாக்கப்படவுள்ளன. (சூ)

### பத்துலட்சம் வீட்டுத்திட்டம்

(அரியாலை)

அரசின் பத்துலட்சம் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமோதய சபைப் பிரதேசத்திலும் 50 பேர்களுக்கு வீடுகட்ட, வீடு திருத்த கிணறுவெட்ட, மின்சாரஇணைப்பு ஏற்படுத்த 7500 ரூபா கடனுகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் முதற்படியான நடவடிக்கைகளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கிராமசேவகர் பிரிவிலும் மேற்கொண்டுள்ளார். கிராமோதய சபைகள் செயல்படாமல் இருந்த பொழுதிலும் கிராமோதய சபைச் செயலாளர்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிருர்கள்.

## இந்திய தேர்தல்கமிஷன்

# வேட்பாளர்களின் தேர்தல் செலவுகள் அதிகரிப்பு!

### நடத்தைகள் குறித்து புதிய விதிகள் தயாரிப்பு!

புதுடில்லி, நவ 4

இந்தியாவில் தேர்தல் செலவுகளை அதிகரிக்க தேர்தல் ஆணையாளர் திரு. ஆர். கே. பிரதிநிதி அனுமதி வழங்கியுள்ளார். இதுசம்பந்தமாக இவர் ஒரு விசேட மகாநாடொன்றை நடத்திஞர். அம் மகாநாட்டுக்கு மாநில மற்றும் தேசிய கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

லோகசபை வேட்பாளர் ஒருவரின் தேர்தல் செலவு ஒன்றரை லட்சம் ரூபாவாகவும், மாநிலசட்டப் பேரவை வேட்பாளர் ஒருவரின் செலவு 45 ஆயிரமாகவும் கூட்டப்பட்டுள்ளது. முன்பு சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவரின் தேர்தல் செலவு 35 ஆயிரமாக மட்டுமே இருந்தது.

தேர்தல் ஆணையாளரின் இவ்விசேட மகாநாட்டில் பல விடங்களில் கட்சிகளின் உறுப்பினரிடையே பொதுக்கருத்துக்கள் நிலவின.

இம்மகாநாடு இறுதியில் தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் நடத்தைபற்றிய விடயத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதெனவும் தீர்மானிக்கப் பட்டது,

தேர்தல் காலங்களில் கட்சி உறுப்பினர்கள் அடிக்கல் நாட்டுவது, வாக்குறுதிகளை அளிப்பது. அரசவாகனங்களைப் பாவிப்பது போன்வற்றுக்கும் தடைபோடப்பட்டுள்ளது. விமானங்களை உபயோகிக்கவும் தடைவிதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (கி

## உகண்டா இராணுவதளபதி

# ஹெலிகாப்டர் விபத்தில் எட்டுப்பேருடன் பலி!

### அடுத்தஜனுதிபதியாகவரவிருந்தவராம்

என்டபே, நவ. 4

உகண்டாவின் அடுத்த ஜனுதிபதியாக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட இராணுவத்தளபதி ஒயிட்டே ஓஜோ ஹெலிக்கொப்டர்விபத்தொன்றில் நேற்று உயிரிழந்தார்.

நேற்றிரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. தளபதி ஓஜோவுடன் வேறு எட்டுப்பேரும் இவ்விபத்தில் உயிரிழந்தனர்.

உகண்டாவின் ஜனுதிபதியாக மில்டன் ஒபேட்டா தற்போது இருந்து வருகிருர். இவரின் நெருங்கிய சகாவே தளபதி ஒயிட்டே ஓஜோ. ஒபோட்டோவைத்தொடர்ந்து அடுத்த உகண்டா ஜனுதிபதியாக இவரே வருவார் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருந்தனர்.

நேற்றைய ஹெலிகொப்டர் விபத்து தற்செயலானதொன்றெனத் தெரிவிக்கப்பட்டது. ஆனுல் உகண்டா தீவிரவாத இயக்மொன்று தளபதி ஓஜோ சென்ற இந்தக் ஹெலிக்கொப்டரைத் தாமே சுட்டுவீழ்த்தியதாகத் தெரிவித்துள்ளது. (கி)

## இம்மாதம் பத்தாம் திகதி

# சோவியத் அதிபர் அரச கருமங்களை ஆரம்பிப்பார்!

மாஸ்கோ, நவ. 4

சோவியத் ஜனுதிபதி திரு. யூரி அந்ரபோவ் இம்மாதம் பத்தாம் திகதி முதல் தமது உத்தியோகபூர்வ அலுவல்களை ஆரம்பிக்கவுள்ளார்.

திரு. அந்ரபோவ் கடந்த ஒரு மாத காலமாக கடும் சுகவீனமாகவிருந்து தேறியவர் என்று தெரிவிக்கப்பட்டது. திரு. அந்ரபோவ் சுகவீனமடைந்திருந்தவேளை சோவியத்தில் பல முக்கிய அலுவல்களிலும், வைபவங்களிலும் கலந்து கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கலந்துகொள்ளாததால் மேற்கத்தியப் பத்திரிகைகள் அவரது தேகநிலை குறித்துப் பல்வேறுவிதமாக விமர்சித்தன. ஆனுல் சோவியத் பிரசாரப்பகுதியினர் மேற்கத்திய செய்திகளை மறுத்துச் சாதாரண தடிமன் காய்ச்சலுக்கே திரு. அந்ரபோவ் உள்ளானூர் என்று தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு சோவியத்

(6-ம் பக்கம் பார்க்க)

ஃபோம்

அதிசய சலவை தூள் உங்கள் துணிகள் வெண்மையாகவும் பளபளப்பாகவும் துவைக்கும்

50 கிராம் 70
225 கிராம் 1.90
550 கிராம் 7.60
1 கி.கிராம் 32.00

நயமான விலையும் கூட

சாளமாக நுரைக்கும்
நன்றுகக் கரையும்
துணிகளின் அழுக்கை விரைவாக நீக்கும்
சிக்கனம் மிக்கது




தயாரிப்பாளர்:
சின்டெட கம்பனி பிரைவேட லிமிட்டெட
தொழில் நுட்பவல்லுனர்
தெய்கோகு ககோ கமபனி லிமிட்
ஒசாகா, யபபான்
கிளை ஸ்தாபனம்
55, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

## மணிவாக்கு

கலைச்சொற்கள் விஷயத்திலுங்கூட உள்ளத்தின் உவட்பே பிரதானம். தமிழ் மொழியால் ஒன்றைக் குறித்தவுடன் தமிழனுக்கு அதுமனதோடு மனதாகக் கலந்து மகிழ்ச்சி தருகிறது. இரவல் மொழிகளால் அந்த மகிழ்ச்சி உண்டாக மாட்டாது.

— ராஜாஜி

# நமது நோக்கு

## ஏன் இந்தத் தயக்கம்?

அலை அமர்ந்தபின் குளிக்க முடிவு செய்த கோஷ்டியினர் கதையே இந்து சமுத்திர மாநாட்டைப் பற்றிய செய்தி நினைவூட்டுகின்றது.

இந்து சமுத்திரத்தை சமாதான மண்டலமாக்க வேண்டுமென்ற பிரகடனத்தை 1971 இல் ஐ நா. நிறைவேற்றிற்று இதனை முன்னின்று மொழிந்தவை இலங்கையும் இந்தியாவும்.

பன்னிரண்டு ஆண்டுகளாக காலத்துக்குக்காலம் இதன் தாமதத்தை இந்தியா கண்டித்து வந்தது. அணிசேரா மாநாடுகளிலும், காமன்வெல்த் மாநாடுகளிலும் இதன் அவசியம் பற்றியும் வற்புறுத்தி வந்தது.

கடந்த காமன்வெல்த் மாநாட்டில் திருமதி இந்திரா காந்தி இப்பிராந்தியத்தின் இன்றைய அபாய நிலையை விவரித்து விளக்கி கொழும்பில் 1984 நடைபெறவேண்டிய மாநாட்டை அங்கத்துவ நாடுகள் ஐ. நாவில் வற்புறுத்த வேண்டுமென்று இடித்துரைத்திருக்கிறார்.

சிறுநாடுகளின் சுதந்திரம் அச்சுறுத்தப்படும் இவ்வேளையில் வல்லரசுகளின் தலையீடுகள் அங்கு துரிதமாக இடம் பெறுவது கண்கூடு. எனவே ஆகிய நாடுகளுக்குப் பொதுவாகவும் இந்துசமுத்திரக் கரையோர நாடுகளுக்குச் சிறப்பாகவும் இந்துசமுத்திரம் சமாதான மண்டலமாக வேண்டியது உடனடியாகக் கவனிக்க வேண்டிய விடயம். இம் மாநாடுகொழும்பில்நடைபெறுவது தீர்மானமானதால், இலங்கை இதுபற்றி துடிதுடிப்புடன் செயலாற்றக் கடமைப்பட்டது.

கடந்த காமன் வெல்த் மாநாட்டின் கவனத்தைக் கவர்ந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் 'சாத்வீகம்' என்ற கோட்பாடு வீட்டிலே தொடங்க இந்த மாநாடு பெரிதும் உதவும் இன்று இந்து சமுத்திரத்தில் பெருந்தொகையான கடற்படைகள் கப்பல்கள் ரோந்து புரிகின்றன பஞ்சுக்கருகில் நெருப்பைவைத்து விடுவது சாத்வீக முறையில் சமாதானத்தைப் பேணுவதற்கு முரண்பட்டவழி.

மாபெரும் கோட்பாடுகள் அனுஷ்டானத்தில் காணப்படாததே இன்றைய உலகில் நெருக்கடிகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம். எங்களைப் போன்ற சிறிய நாட்டின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான இப் பிரகடனம் ஏட்டுச் [தேங்காய்] சுரைக்காயாக இருப்பதை இலங்கை மட்டுமல்ல வேறுபல நாடுகளும் விரும்பவில்லையென்பது வெளியாகி விட்டது.

அடுத்தவருடம் நடக்கவிருந்தஇந்த மாநாட்டைக் கூட்டுவதற்கு முட்டுக்கட்டையாக விருப்பவர்மேனாட்டுக்கோஷ்டியினர் ஐநாவின் இந்துசமுத்திர மாநாட்டு உபகுழுவிற்கு தலைமை தாங்குபவர் ஐ. நா. வின் இலங்கைப்பிரதிநிதி திரு பென் பொன்சேகா.

ஒருவருடமாக அரும்பாடுபட்டு முடிவுகட்டிய அறிக்கை குறித்த இலக்கை அடையவில்லையென்று அவர் கவலை தெரிவித்திருக்கிறார். வருகிற வருடம் இம்மாநாடு நடத்தத்தவறியது பற்றி எதிர்ப்புத் தெரிவித்து, எவ்வகையிலும் 1985ல் இது நடந்தே தீரவேண்டுமென்ற தீர்மானம் கடந்தவாரம் நிறைவேறியிருக்கின்றது.

அதே சமயம் போலந்து இரண்டு பந்திகளை அத்தீர்மானத்துடன் சேர்த்து பெரும்பான்மை வாக்கைப் பெற்று வெற்றி கண்டது

தற்சமயம் அரசியல், பாதுகாப்பு நிலைமை சாதகமில்லையென்ற காரணத்தை காட்டிப் பின்போடுவதால் இது தொடர்ந்து ஒரு சாட்டாக விருக்கப்படாதென்றும் மாநாட்டுக்குரிய சகல விதமான, அமைப்பு, சர்வதேச அபிப்பிராய தொடர்புகள் போன்ற- ஆயத்தங்கள்வருகிறஆண்டு முடிவுக்குமுன் பூர்த்தியாக வேண்டுமென்பதே போலந்து கொண்டுவந்த திருத்தங்கள்.

நிலைமையை பாரபட்சமின்றி நோக்குங்கால் மேனாட்டு வல்லரசுகள் இம் மாநாட்டைவிரும்பாததும், சோஷலிசகுழுவினர் இதனை அவசியம் கூட்டவேண்டுமென்பதும் தெளிவாகிறது.

இதற்கு வல்லரசு ஒன்று பின்னாலிருந்து தடைகளை ஏற்படுத்துவதென்று கருதப்படுகிறது.

இலங்கையின் பங்களிப்பும் பொறுப்பும் மிக முக்கியமானதால் இதற்குத் தடையாயிருக்கும் தீயசக்திகளுக்கு எவ்வகையிலும் இடமளிக்கலாகாது.

## அகதிமுகாம் இடமாற்றம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கரடிப்போக்கு ரேட்டறிக்கழக அகதிகள் முகாம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம்முகாம் நடைபெற்று வந்த நெல்சந்தைப்படுத்தும் சபையின் கட்டிடம் கிளிநொச்சியின் புதிய அரசாங்க அதிபரின் செயலகம் இயங்க தேவைப்பட்டதாலேயே இம் முகாம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது:

முகாமின் பிரதம நிர்வாகி திரு ப. வை. ஜெயபாலன் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் பலனாக பரந்தன் முரசுமோட்டையில் அமைந்துள்ள இரணமடு பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்துக்கு கரடிப்போக்கு முகாம் இடமாற்றம் செய்யப்பட்டது.

(வெ)

# வீண்விரயம் வேண்டாம்

நா. மாணிக்கஇடைக்காடர்

மூன்று ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்கு புகையிரதத்தால் பிரயாணம்செய்தேன் சாவகச்சேரிக்கு வண்டி வந்திருக்கும்-அப்பொழுது மலசலகூடத்திற்கு சென்றேன். தண்ணீர் பைப்பிலிருந்து ஓடிக்கொண்டிருந்தது. பைப்பை பூட்டிப் பார்த்தேன். முடியவில்லை வெளியே வந்து ஒரு பலசாலியான இளைஞனைக் கூப்பிட்டேன். என்னென்று கேட்டுவிட்டு தண்ணீர்ஓடினால் ஓடட்டும் என்று சொல்லி பின்வாங்கினார். மாங்குளம் போகுமுன் உள்ள தண்ணீர் ஓடிவிட்டது. இதற்கு பிறகு பிரயாணிகள் புகையிரதம் நின்றபொழுது புகையிரத நிலையங்களில் இறங்கி தேவையான நீரை பெற்றார்கள். சிலவேளை நாம் நினைக்கக்கூடும் தன் பொருளாயிருந்தால் இந்த இளைஞன் இப்படிச்செய்திருப்பாரோவென்று யார் பொருளாயிருந்தாலும் இது மன்னிக்க முடியாதது. தண்ணீர் ஒரு பெறுமதியான பொருள். சும்மா பயனற்ற முறையில் சிந்தப்படாது. விவசாயத்திற்கு மாத்திரமல்ல மனித தேவைக்கும் தண்ணீர் இன்றியமையாதது. அதோடு சனத்தொகை பெருக தேவையான தண்ணீருக்கு தட்டுப்பாடு வரும். உதாரணமாக சென்னை பட்டணத்தை பாருங்கள். தீராத தண்ணீர் பஞ்சம் காரணம் 50 ஆண்டுகளில் 6 இலட்சமாயிருந்த சனத்தொகை இப்பொழுது 40இலட்சத்திற்கு கூடிவிட்டது.

நான் பதுளையில் உபஅரசாங்க அதிபராயிருக்கும் பொழுது அரசாங்க அதிபர் ஒரு ஆங்கிலேயர். நாங்கள் இருவரும் ஒரு அரசாங்க உணவு ஆலையை பார்வையிட சென்றோம். நாங்கள் ஆலைக்கு நுழையும்பொழுது ஒருபைப்பிலிருந்து தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அதிபர் ஓடிப்போய் பைப்பைப் பூட்டிவிட்டு ஆலை உத்தியோகத்தரை ஏன் இப்படி ஓடவிடுகிறீரென கேட்டார் அதற்கு அந்த உத்தியோகத்தர் இது வாடகைக்கு எடுத்தகட்டிடம தண்ணீருக்கு அரசாங்கம் பணம் கொடுப்பதில்லை இதனால் அரசாங்கத்திற்கு பாதகமில்லையென்றார். அதிபருக்கு கோபம் வந்துவிட்டது. இப்படிப்பட்ட விரயம் உலகத்திற்கே ஒருபெரியநஷ்டமென்று ஒரு பிரசங்கமே செய்தார். இவர் முன்னேற்றமடைந்த நாட்டிலிருந்து வந்தவர். இப்படிச் செய்வதால் எவ்விதவிரயமும்ஏற்படாது என்று அக்கறை காட்டினார். எனக்கு அப்பொழுது வயது 28 அவர் புத்திமதிஎன்மனதில்பதிந்தது

தண்ணீருக்குபின் உணவைப் பார்ப்போம். அரிசியே எங்கள் முக்கிய உணவு. நெல்லாயிருக்கும்பொழுது விரயமுண்டு அதேபோல் அரிசியிலும் விரயமுண்டு. பயிராயிருக்கும் பொழுது நெல்லை பாதுகாக்க வேண்டும். பிறகு அறுவடையிலும், சூடுமிதிப்பதிலும், சேகரிக்குமிடங்களிலும் (in Storage, அரிசியாக்கும் பொழுதும் (Milling), கொண்டு செல்லும்பொழுது (Transport) விரயமுண்டு. கடைசியாக சமைத்து உண்ணும்பொழுதும் விரயமுண்டு சில பிள்ளைகள் சோறு மிஞ்சம்விடுவது வழக்கம். எனது தாயார் கூறுவார் எவ்வளவு தேவையானாலும் சாப்பிடுங்கள். ஆனால் மிஞ்சம்விடப்படாதென்று. திருவள்ளுவரையும் மனைவி வாசுகியையும் பற்றி எங்கேயோ வாசித்தது ஞாபகத்திற்கு வருகிறது. உணவு கொடுக்கும்பொழுது ஒரு ஊசியும், ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் வைக்குமாறு வள்ளுவர் மனைவியாருக்குஉத்தரவிட்டார் ஆனால் ஒரு நாளும் ஊசியையோ கிண்ணத்தையோ பயன்படுத்தவில்லை வள்ளுவர். இருவருள் வாசுகி முதல் இறக்கிறார். வள்ளுவர் புலம்பும்பொழுது சாதமிடும் பொழுது ஏதாவது சிந்தினாய் ஊசியாலெடுத்து கிண்ணத்தில் கழுவி சாப்பிடலாமென்று தான் நான் உத்தரவிட்டிருந்தேன். இவை ஏன் என்றும் கேட்கவுமில்லை. பாவிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவுமில்லை நீயே மாதரில் மாணிக்கமென்று கூறினார். உணவை விரயப்படுத்தக்கூடாதென்று எங்களுக்கு அந்தக்காலம் தொட்டே பண்பு இருந்து வருகிறது.

சில வேளைகளில் தவிர்க்க முடியாமல் பொருள் விரையமாகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் புத்தி சாதுர்யத்தால் விரையமான பொருளை மீண்டும் உபயோகிக்கலாம். உதாரணமாக மலேசியாவில் நான் கண்ட சம்பவத்தை கூறுகிறேன். கோலாலம்பூர் பட்டிணத்திற்கு மிகவும் சமீபத்தில் பத்துமலை என்ற முருகன் தலமுண்டு. ஒவ்வொரு தை பூசத்திற்கும் பல ஆயிரக் கணக்கானோர் சுவாமிதரிசனத்திற்கு வருவார்கள். இவர்கள் எல்லோருக்கும் அந்தத் தலத்திலே அன்னதானம் கொடுப்பது வழக்கம். ஒருமுறை நானும் பாரியாரும் சென்றிருந்தோம். சுவாமி தரிசனத்திற்கு பின் மலையிலிருந்து இறங்கும்பொழுது ஒரு வாய்க்காலில் ஒரு சீன வயோதிபரும் இரு இளைஞர்களும் ஏதோ எடுத்துக்கொண்டிருந்தார்கள. அப்பொழுது மலாய் மொழியில் என்ன செய்கிறீர்கள் என நாங்கள்கேட்டோம. வயோதிபர் என்ன சொன்னார். 'இவ்வளவு மக்களும் உணவுக்கு பின் கைகளை கழுவ கைகளிலுள்ள சோறு தண்ணீருடன் இந்த வாய்க்கால வழியால் ஓடும். நாங்கள் இங்கே இரும்பு வலையால் மறித்து சோற்றை சேர்த்து சாக்குகளில் கட்டி லொறியில் ஏற்றிக்கொண்டுபோய் எங்கள் பன்றிகளுக்கு உணவாய்க் கொடுப்போம். வருடாவருடம் இதை செய்கிறோம். என்னே இந்த மக்களின் உணர்வு! உலகமே மெச்சக்கூடிய வகையில் சீனமக்கள் எஞ்சிய பொருளைக் (Waste) கூட விரயமாக்கவிட மாட்டார்கள். மலத்தைக்கூட பயன்படுத்துகிறார்கள். உரமாக வயல் தோட்டத்திற்கு உபயோகிக்கிறார்கள். சீன நாட்டில் வெளியே எறிவதற்கு பொருளுமில்லை, கழிவுப்பொருளுமில்லை.

வீடுகளில் அநாவசியமாக பொருள்கள் வைத்திருப்பதும் ஒருவித விரயம்தான். நாலு நாற்காலிகள் போதுமாயின் ஏன் ஆறு நாற்காலிகள் வைத்திருப்பான்? எங்கள் உடையும்

[5ம் பக்கம்பார்க்க]

# கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கம்

இன்று 5-ம் திகதி அமரர் வீரசிங்கம் அவர்களின் நினைவு தினம். இவர் அமரராகிப் பத்தொன்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

இவர் மானிப்பாய் நவாலிக் கிராமத்தில் 1892-ம் ஆண்டில் பிறந்தார். உயர்கல்விச்சாலைகளில் பயின்று, கலைமாணிப் பட்டதாரி ஆசிரியராகிக் கல்விப் பணி ஆற்றத்தொடங்கினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக முப்பது ஆண்டுகள் கல்விப்பணி புரிந்தார்.

இவர் காலத்திலேயே இக் கல்லூரி பல துறைகளிலும் முதன்மைபெற்று விளங்கியது.

கல்வியில் இவர் பணிபுரிந்ததின் பேருக, அப்போதைய ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டார்.

கூட்டுறவுத்துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவுத் துறையிலும் பணிபுரிய முனைந்தார். மானிப்பாய் ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு ஐக்கிய நாணயச்சங்கம் [கடனுதவு சங்கம்] ஒன்றை நிறுவி அதன் தலைவராயிருந்து ஒத்துழைப்பணி புரியத்தொடங்கினார். இதுவே அவர் கூட்டுறவுத்துறையில் சேருவதற்கு ஆரம்ப நுழைவாயிலாயிற்று

யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதிலும் கூட்டுறவுப்பணி புரியத் தக்கதான புதிய புதிய வாய்ப்புக்கள் இவருக்கு அடுத்தடுத்துக் கிடைத்துக்கொண்டேயிருந்தன.

இவர் பண்டத்தரிப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டார். இதன்மூலம் யாழ். வட்டாரப் பகுதிகளில் கூட்டுறவுப் பணிபுரிய வாய்ப்புக் கிட்டியது.

அந்நாட்களில் இலங்கை வடக்குக்கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவாளர் சேர்ந்து முதன் முதலாக 1937-இல் வட இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவினர். இது வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை என அறியப்பட்டு வந்தது இச்சங்கத்தின் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் மறையும் வரை 27 ஆண்டுகள் இச்சபையின் ஒப்பற்ற தலைவராக இருந்துவந்தார்,

அப்போது புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு மாகாண வங்கிக்கும் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## பண்டிதர் ஆசிநாதர்

இலங்கை வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் கூட்டுறவுப் பணியில் பெரிதும் அறிமுகமாயிருந்த வீரசிங்கம் அவர்களுக்கு இலங்கை எங்கும் கூட்டுறவுப் பணி புரியவும், சிங்கள மக்களால் கணிக்கப் படவும் தக்கதான அருந் தருணமும் கிட்டியது.

இலங்கை முழுவதிலுமுள்ள கூட்டுறவாளர் கூடி 950-ம் ஆண்டில் கொழும்பு மாநகரில் அகில இலங்கை கூட்டுறவு ஒன்றியம் ஒன்றை உருவாக்கினர்.

இந்த உயர்நிலைக் கூட்டுறவுச்சம்மேளனத்துக்கும் வீரசிங்கம் அவர்களே முதல் தலைவராக ஏக சம்மதத்துடன் தெரிவு செய்யப்பட்டார். இவர் கூட்டுறவியக்கம் பற்றியதோர் பேரான தத்துவ விளக்க நூல் ஒன்றை வெளியிட்டு, சிறந்த நூலாசிரியர் என்ற பெரு மதிப்பையும்

(5ம் பக்கம் பார்க்க)

# விம்பிள்டன் விநாயகருக்கு முறைப்படி தினப்பூசை

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள விம்பிள்டனில் எழுந்தருளியிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானுக்கு யாழ்ப்பாணக் கோவிலில்பூசை நடைபெறுவது போன்று முறைப்படி பூசைகளெல்லாம் நடைபெற்றுவருகின்றது.

விம்பிள்டனில் கோயில் கொண்டிருக்கும் மூன்றடி உயரக்கணபதி, பக்தர்களைக்கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறார். சுமார் 1500 சதுர அடிகளே இருக்கும் கோவிலில் மூலவரைத் தவிர இரண்டடி உயரத்தில் பஞ்சலோக உற்சவமூர்த்தியும் இருக்கின்றது. விநாயகப் பெருமானைச்சுற்றி ஸ்ரீவள்ளி தெய்வானையுடன் ஸ்ரீசுப்பிரமணியர், நடராஜா, சிவகாமி, பாலஸ்ரீ, ஐயப்பன், அம்பாள், ராமர் சீதை, லட்சுமணன், ஆஞ்சநேயர் அனைவரும் பஞ்சலோக விக்கிரகங்களாக அலங்கார கோலத்துடன் காட்சியளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

லண்டனில் தங்கியுள்ள இலங்கை இந்துக்கள் இவ்விநாயகராலயத்தைப் பராமரித்து வருகின்றார்கள். இங்கிலாந்திலுள்ள விநாயக பக்தர்களின் ஒத்துழைப்புடன் 1981ல் ஆரம்பிக்கப்பட்ட கட்டடவேலைகள் ஓராண்டில் பூர்த்தியடைந்தது இவ்விநாயகராலயத்திற்கு இந்துக்கள், ஆங்கிலேயர், ஐரோப்பியர் எல்லோரும் சென்று வணங்கிச் செல்லுகின்றனர்.

விநாயகராலயத்தில் பூசைகள் எல்லாம் முறைப்படி நடாத்தப்படுகின்றன. இங்கு முன்னர் பருத்தித்துறை சிவன் கோவிலில் பூசைகளை நடாத்திவந்த இராமநாத சர்மாவின் புத்திரரான வாஹீச்வரசர்மா பூசைகளை நடத்திவருகின்றார். இங்கு கல்யாணங்கள், பாட்டு, நாட்டிய தியான இந்துமத போதனைவகுப்புகள் அதனைத்தும் நடைபெற்று வருகின்றன. ஆலய நிர்வாகசபையினர் 'கணேசாஞ்சலி' என்ற ஆங்கில மாத இதழ் ஒன்றையும் வெளியிட்டுவருகின்றனர்.

அண்மையில் விம்பிள்டன் விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்யும் வாஹீஸ்வர சர்மாவுக்கும் பருத்தித்துறை மாலுசந்தி விநாயகராலய குருக்களான தேவராசாக் குருக்கள் புத்திரியான செல்வி வத்சலாவுக்கும் அதே ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது லண்டனிலுள்ள இந்திய தூதுவர் திரு. வெங்கட்ராமன் திருமணத்தை நடத்திவைத்தார்.

## சர்வோதய பாதயாத்திரை:

# பத்தாயிரம் பேர் நாளை கதிர்காமத்தில் கூடுவர்!

(வவனியா)

சர்வோதயத் தலைவரின் இன ஐக்கியத்துக்கும் நாட்டின் அமைதிக்குமான வடபகுதிக்கான பாதயாத்திரை நாளை அதிகாலை கதிர்காமத்திலிருந்து ஆரம்பமாகும்.

சர்வோதயத் தலைவருடன் நீதிக்கும், இனங்களுக்கிடையிலான சமாதானத்துக்குமான இலங்கை கிளைத்தலைவர் வணபிதா திஸ்ஸபால சூரியாவும் மாத்தறை மாவட்ட பிரதம பௌத்த குரு ஒருவரும் பாதயாத்திரையின் போது உடன் வர இருக்கின்றனர்.

இப்பாதயாத்திரை தொடர்பாக சமய பூசைகள் கதிர்காமத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

பாதயாத்திரையின் போது வெளிநாட்டுத் தொண்டர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலிருந்து சர்வோதயத் தொண்டர்கள் முதல் தின வைபவத்தில் கலந்து கொள்ள கதிர்காமம் செல்ல விருக்கின்றனர், இதற்கான ஏற்பாடுகளை அவ்வப் பகுதி மாவட்ட சர்வோதய இணைப்பாளர்கள் செய்துள்ளனர். 6-ம்திகதி ஆரம்பமாகும் வைபவத்தில் 24 மாவட்டங்களிலிருந்தும் சர்வோதயத் தொண்டர்கள் பங்கெடுக்கவுள்ளனர்.

அன்றைய தினம் கதிர்காமத்தில் சுமார் பத்தாயிரம் பேர் கூடுவார்கள் என்று சர்வோதய வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதயாத்திரை குழுவினரைத் தொடர்ந்து வெகுசன தொடர்பு சாதனப் பிரிவினரும் முதலுவிசிகிச்சைப் பகுதியினரும், சர்வோதய நடமாடும் தற்காலிக காரியாலயமும் பின் தொடருமென சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதற்கென தனித்தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாதயாத்திரை தொடங்கும் தினத்திலிருந்து 100 நாட்களுக்கு சர்வோதய கிளை மாவட்டம் எங்கும் சமாதானத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டங்கள் அமையுமென தெரிவிக்கப்பட்டது. (க)

## கூட்டுறவுத்தந்தை....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றிருந்தார்.

மக்கள் பணி எல்லாவற்றிலும் தொண்டாற்றிய வீரசிங்கம் அவர்களுக்கு அரசியலிலும் பணி புரிய அருந்தருணம் கிட்டியது.

1952-ம் ஆண்டில் நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெற்று விளங்கிய வீரசிங்கம் அவர்கள் முற்றிப்பழுத்த தீங்கனியாக - முதன்மையான முழு மனிதனாக விளங்கி வாழ்ந்து நமது 73-ம் வயதில் அமரர் ஆனார்.

கூட்டுறவுப் பெருமக்கள் அவர் நினைவாக யாழ். நடு நகரில் கூட்டுறவு இல்லத்தைக் கட்டி, அதன் பேரால் மண்டபத்துக்கு வீரசிங்கம் மண்டபம் என்னும் பெயருமிட்டு அன்னாரின் பெருமையை ஆண்டுதோறும் நினைவூட்டிக் கொண்டே வருகின்றனர்.

# வீண்விரயம் வேண்டாம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோல்தான். பணவசதியுள்ளவர்கள் தேவைக்கு மிஞ்சிய உடை வாங்கிவைத்திருப்பார்கள். நான் எனது நண்பர்களுடன் கடைகளுக்குப் போனால்அவர்களுக்கு கொடுக்கும் புத்திமதி ஒரு பொருளை வாங்குமுன் இது இல்லாமல் சமாளிக்க முடியுமாவென்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவேண்டும். அப்படிக் கேட்டால் சில பொருள்கள் வாங்கத் தேவையில்லையென்று அறியவரும்.

ஒரு தற்காலிக தட்டுப்பாட்டை ஹிட்லர் எப்படி சமாளித்தாரென்று பார்ப்போம். சேட் துணி சண்டை காலத்தில் குறைவாயிருந்தது. இதற்கு ஹிட்லர் ஜெர்மன் மக்களுக்கு ஒரு உதிதரவிட்டார் சேட் முன்பக்கத்து நீளமளவுக்கு பின்பக்கமுமிருக்க வேண்டுமென்று. சாதாரணமாக சேட் பிற்பக்கம் முற்பக்கத்திலும் பார்க்க இரண்டு மூன்று அங்குலம் கூடவிருக்கும். இந்த முறையால் எத்தனையோ கோடி மீட்டர் துணியை சேகரித்து தட்டுப்பாட்டை நீக்கினர். இந்த வெற்றியை கண்டதும் இந்த முறையிலேயே சேட் எதிர்காலத்தில் அணியவேண்டுமென உத்தரவு பிறப்பித்தது. எங்கள் பிடி அரிசி முறையும் இதே மாதிரி. சமைக்கமுன் ஒரு பிடி அரிசியையெடுத்து பிறம்பாக ஒரு பானையில் சேகரித்தால் சில வாரங்களில் பானை நிறைந்துவிடும். இதெல்லாம் விரயத்தைத் தடுக்கும் முயற்சிகள்.

உணவு, நீர், உடை மனிதனின் வாழ்க்கைக்கு முக்கியமானவை. இந்த விடயங்களையிட்டு சில குறிப்புகள் எழுதியிருக்கிறேன். அதேபோல் எங்களுக்கு மற்ற விடயங்களிலும் வீண் விரையம்வேண்டாம். விரயத்தைப்பற்றி எங்கள் மக்களுக்கு அதிகம் சொல்லத்தேவையில்லை எனினும் நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்திலும் நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளிலும் விரயமில்லாமல் சீவிக்கப்பழகவேண்டுமென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருத்தல் நல்லது. சில விடயங்களில் விரயத்தை தவிர்க்க அறிவு போதாது. இவ்விடதது அறிவை வளர்க்கவேண்டும். தெரிந்த விடயங்களில் உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டும்.

## கொள்ளை வழக்கு ஒத்திவைப்பு

[மட்டுவில்]

கொடிகாமம் புகையிரத நிலையக் கொள்ளை வழக்கை சாவகச்சேரி நீதவான் பெப்ரவரி 10-ம் திகதி வரை ஒத்திவைத்தார். (க)

# துப்பாக்கிச் சூட்டுக்கு விவசாயி பலி!

(வவனியா)

துணுக்காய்- கல்விளான் என்ற இடத்தில் விவசாயி ஒருவர் இனம்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானார்.

இரத்தினராஜா எனும் விவசாயி மரணமானவராகும்.

இறந்தவர் மாங்குளம் இராணுவ முகாமுக்கு மரக்கறி வகைகள் கொடுப்பவர் என்றும் கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக இது வரை எவருமேகைதாகவில்லை. [க]

## ரூபவாஹினியில் 'சொர்க்கம்' தமிழ்ப்படம்

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சியில் எதிர்வரும் புதன் கிழமை இரவு 'சொர்க்கம்' என்ற தமிழ் திரைப்படம் ஒளிபரப்பப்படவுள்ளது. (வெ)




கோஸ்ட்

முழு ஆடை நிறைந்த பால் மா

உடன் உங்கள் பிள்ளைகள் வளருவதை கவனியுங்கள்

கோஸ்ட் முழு ஆடை நிறைந்த பால் மா. ஒல்லாந்திலிருந்து உங்களுக்கு கிடைக்கிறது. அதிக சுவையுள்ளது. விட்டமின்கள் ஏயும் டீயும் செறிந்தது. விரைவில் கெடாதது. கிருமி ஒழிக்கப்பட்டது. நீண்ட காலம் வைக்கக்கூடியது. தேநீர், கோப்பி, கொக்கோ ஆகியவற்றுடனும், சமையலுடனும், பாவிக்கலாம். முழுக்குடும்பத்திற்குமான சக்திபானம்.

நாடு முழுவதிலும் கிடைக்கும்.

400 கிறும்ஸ்–ரூபா. 38/50.
900 கிறும்ஸ்–ரூபா. 80/-

விற்பனை விநியோகஸ்தர்கள்
பெயர்பீல்ட் டிரேடிங் கம்பனி லிமிட்டெட்
(கார்மார்ட் குறூப் அங்கத்தவர்)



ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7.45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310
2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596
3. நியூ ப்ரசிதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

| | |
|---|---|
| 1. ஹோம் பிறுன்ஸ் லிமிட். 463, காலி வீதி, கொழும்பு-3 தொலைபேசி: 589190—587680 | ஸ்ரீ மணிமலர் ஸ்ரோர்ஸ் 157/2 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11. தொலைபேசி: 23277 |

# இன்றைய பலன்

**கார்த்திகை 19-ம் திகதி**
**திங்கட்கிழமை**
**(5-12-83)**

மேடம்: மக்கள் புகழ்சியும் மனப்புகைச்சலும் பிறரின் நச்சரிப்பும் உங்களை ஆத்திரமடையச் செய்யும். சிந்தனைகளை அலைமோதவிடாமல் பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

இடபம்: கன்னியர் காதல் கணைதொடுப்பர். மனையில் மகிழ்ச்சி தவழும். இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். பிரிந்தவர் இணைய இடமுண்டு.

மிதுனம்: தென்றலும் தீயாகமாக மாறும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றும். ஒன்றைநினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக மாறும்.

கடகம்: பூமிலாபம் உண்டு. அதிஷ்டதேவதை இன்று உம்மிடம் தஞ்சமடையும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்கள் ஒத்துழைப்புண்டு.

சிங்கம்: சுகபோக தினம் சொகுசான வாழ்வை விரும்பும். ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும். இருப்பிடமாற்றம் சிந்தையில் ஏற்படும். தொழில்துறையில் உயர்ச்சியோ இடமாற்றமோ உண்டு.

கன்னி: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் கிட்டும்.

துலாம்: பணம் பறிபோவதற்கு இடமேற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். வாய்வுப்பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்வது நன்று.

விருட்சிகம்: குமுறும் நெஞ்சுடன் நாளைக் கழிப்பீர்கள். எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணத்தை தவிர்ப்பது விரும்பத்தக்கது.

தனு: அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு. இல்லத்தில் திருப்திகரமான நிலை ஏற்படும். அந்தஸ்திலும் உயர்ச்சியுண்டு.

மகரம்: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம். பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

கும்பம்: ஆக்கப் பணியில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிட்டும். தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம் சிறப்பான தினம்.

மீனம்: செய்தொழில் சிறப்புண்டு வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. வெளியிடச் செய்தி மகிழ்ச்சியைத்தரலாம். அறவழியில் நாட்டம் பிறக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


பயிற்சிகள்
COMPUTER PROGRAMMING
BASIC — COBOL ஆகிய Computer மொழிகளில் பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயறிங், வெல்டிங், எயர்கொண்டிசனிங்.
ஒருமாத முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.
★ Hotel Management, Spoken English.
ஆரம்பம் 14-12-83
The School of Computer Studies,
52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



விவசாயிகளே !!
BAYER
உங்கள் நெற்பயிரைத் தாக்கும் எரிவந்தம், வெடிப்பு, கபிலப்புள்ளி, மடற்கொப்புள நோய்களைக் கட்டுப்படுத்த பாவியுங்கள்.
அதிசிறந்த பங்கசு கொல்லி
ஹினோசான் E. C. 50%
(எடின்பென்பொஸ்)
100 மிலி — 31/50, 200 மிலி — 61/75, 450 மிலி — 132/50
இது பல வருடங்களாக உங்களுக்கு சேவையாற்றி
"தமரோன்", "அன்ரகோல்"
போன்ற சிறந்த மருந்துவகைகளை தயாரித்து விநியோகிக்கும்
ஹேகெம் லிமிட்டெட் இன்
மற்றும் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.
உங்கள் விநியோகஸ்தர்கள்:
யூனியன் ஏஜென்சீஸ்,
பலாலி ரோட், யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ்,
கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ்,
வவுனியா.


# "மாணவர்கள் ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"மாணவர்கள் இளமையிலேயே சீரிய சிந்தனைகளுடன் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தால், எதிர்காலத்தில் உன்னத நிலையில் திகழுவார்கள்" என்று, ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. வீ. கோபாலசுந்தரம், அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்படும் இலவசக் கல்வி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

இந்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு செ. வசந்தராசபிள்ளை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. கோபாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில்;- "மாணவர்கள் தமக்குள்ள கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை அனுசரித்து நடக்க வேண்டுமென்றும், உலகில் பெரியார்கள் இளமையிலேயே ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்ததால் மனித தெய்வங்களாகப் போற்றப்படுகிறார்கள்" என்றும் கூறினார். (மா)

# வீடமைப்புத் திட்டங்கள் தொடர்ந்து அமுலாகும்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்டத்தில் கிராமோதயசபை- பிரதேசசபை ஆகியன இயங்காதிருந்தும் விசேஷ சேவை அலுவலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக கிராமிய மட்டத்தில் வீடமைப்பைத் தரமுயர்த்த வீடமைப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு லட்சம் வீடுகள்கட்டும் திட்டத்தில் 1977-82 காலப் பகுதியில் பிரதம மந்திரியால் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புத்திட்டம் தொகுதிகள் தோறும் வீடில்லாத மக்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள்மூலம் வழங்கப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு 1983 ல் பரீட்சார்த்தமாக கிராமிய வீடமைப்பைத் தரமுயர்த்தும் நோக்கமாக மாதாந்தம் ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு 7,500 ரூபாவுக்கு மேற்படாத கடன் வழங்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்படும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது.

அதே அடிப்படையில் 1984 ஜனவரி முதல் கடன் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகுதியான விண்ணப்பதாரிகளை, அதிகாரசபை ஊழியர்கள் நேரில் சென்று சந்தித்து விண்ணப்பப்பத்திரங்களை ஒப்படைத்து அவர்களுக்குவேண்டிய ஆலோசனைவழங்குவர்.

இக்கடன் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்துக்கு ரூபா 5 மட்டும் செலுத்த வேண்டும்.

இதன் பிரகாரம் ஒரு கிராமோதயசபைக்கு தகுதியான 10 விண்ணப்பதாரிகளுக்கு உடனடியாக கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 176 கிராமோதயசபை பகுதிகளிலும் முதல் கட்டமாக 1760 குடும்பங்கள் வரையில் கடன் பெற்று நன்மையடையக்கூடியதாக இருக்கும். (சூ)

## சோவியத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் திரு. பிரஷ்நேவ் காலமானதைத் தொடர்ந்து திரு. அந்ரபோவ் சோவியத் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர் அந்ரபோவ் வழமைக்குத் திரும்பியிருப்பதை மே. ஜெர்மனியின் அதி பிரபல பத்திரிகையொன்றே பெரியளவில் அறிவித்துள்ளது. (கி)

## 'வீதி வாரம்'

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள 23 கிராமசேவை அலுவலர் பிரிவிலும் "வீதிவாரம்" கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மேற்கொண்டுவருகிறது.

இவ்வாரத்தின்போது பெருந்தெருக்கள்திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றின் பராமரிப்பின் கீழ் உள்ள பெரிய, சிறிய வீதிகளைத் துப்புரவு செய்தல், திருத்துதல் போன்ற பணிகளில் கிராமிய மக்களை ஈடுபடுத்தி சிரமதானம் செய்யப்படவுள்ளது.


வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
TFC
த பிறுன்ஸ்கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
பிரயாணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
மாதர்களைக் கவர்ந்த
மகத்தான 4 வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
நாகேஷ், பத்மினி, பாலையா
**எங்களுக்கும் காலம் வரும்**
(சிறந்த குடும்பச்சித்திரம்)
புதியபிரதி

**வின்ஸர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
Burt Reynolds
Lesley - Anne Down
in
**Rough Cut**

5-12-83 முதல்
முத்துராமன்—விஜயா,
நாகேஷ்
**சர்வர் சுந்தரம்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
ரசிகர்களின் வேண்டு
கோளுக்கிணங்க காட்சி
நேரங்கள் மாற்றப்பட்
டுள்ளன.
தினசரி: 10-30, 2-30
6-00, 9-00
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**லிடோ** (யாழ்நகர்)
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
**Saturn-3**
(Space Horror)
(adults only)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**கண்மணிராஜா**
6-ந் திகதி முதல்
ரகசிய பொலீஸ்

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
சிவாஜி — தேவிகா
**கர்ணன்**

**Rajah** JAFFNA
From 5-12-83
Daily 10-30, 2-00, 4-30
6-30 and 8-30
SONDRA CURIE
TONNY YOUNG
**Police Women**
(Color)
An Action - Packed
Karate Thriller
Cold steel on the outside
All woman on the inside
முழுநீள கராட்டி
சண்டைப்படம்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-30
7-00
THE FINAL
CONFLICT
6-ந் திகதி முதல்
வீட்டு மாப்பிள்ளை

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**றீகல்** (யாழ்நகர்)
தினசரி: 10-30, 2-30,
6-00
ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா
சுமன், சௌகார் நடிக்கும்
**தீ**
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம்புதிய வண்ணப்பிரதி

வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**


## அகதிகள் முகாம்களுக்கு விஜயம்

(கிளிநொச்சி)

யாழ். மாவட்டத்தின் புதிய சமூகசேவை உதவி பணிப்பாளராக பதவி ஏற்றுள்ள திரு. அமிர்தசாகரன் கிளிநொச்சியில் உள்ள அகதிகள் முகாம்களிற்கு விஜயம் செய்து அகதிமுகாங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அகதிமுகாம்களின் நிர்வாகிகளையும் சந்தித்து முகாம்களை நல்ல முறையில் நடத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார். (வெ)

உ

உரும்பராய் தெற்கு

திரு. பொன்னம்பலம் - இராசேந்திரன் B.Sc

அவர்களின்

### சபிண்டீகரணக் கிரியைகள்



உரும்பராய் தெற்கைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாபணம் தொழில் திணைக்கள உத்தியோகத்தருமான அமரர் திரு. பொ. இராசேந்திரன் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் 7 - 12 - 1983 புதன்கிழமை முற்பகல் 10 மணியில் இருந்து எமதில்லத்தில் நடைபெறும்,

அன்னாரின் ஆன்ம சாந்திக்கிரியைகளிற் கலந்து கொள்வதுடன், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்,

மனைவி, மகன், பெற்றார்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

குமரகோட்டம்,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.
5 - 12 - 83

10359

வவுனியா நகர சபை

## கேள்வி அறிவித்தல்

01-01-84 முதல் 31-12-84வரை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணைப் பிரதிகளில் 22-12-83ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அட்டவணை

| | | 1983ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. ச | ரூ. | ரூ. |
| 1. | குருமன்காடு-கரம் பைக்காட்டுச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 23012-00 | 100/- | 1000/- |
| 2. | குருமன்காடு-கரம்பைக் காட்டுச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 12311-00 | 100/- | 1000/- |
| 3. | வவுனியா திறந்த வெளிச் சந்தை கிழமைச்சந்தை ஆகியன | 23550-00 | 100/- | 1000/- |
| 4. | குருமன்காடு-கரம்பைக் காட்டுச் சந்தி மீன் சந்தை | 2134-00 | 50/- | 100/- |
| 5. | வவுனியா மீன் சந்தை | 5050-00 | 50/- | 100/- |

மேற்படி கேள்விப் படிவக் கட்டணமும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படுவதன் பேரில் 21-12-83ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்பே கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். கேள்விப் படிவக் கட்டணமும் வைப்புப் பணமும் ரொக்கமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வவுனியா நகர சபை அலுவலகத்தில் (நூலகக் கட்டிடத்தில்) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். வி. இரத்தினசிங்கம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகர சபை அலுவலகம்,
வவுனியா, 30-11-83

10357


மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும் நாடவேண்டியது

**வீனஸ்** 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

**கிறிஸ்மஸ் புதுவருடங்களை முன்னிட்டு**

பாட்டா பாதணிகள்

**மலிவு விற்பனை**

**எஸ். சின்னத்துரை அன் பிறதர்**

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## ஜனவரி முதல் இடமாற்றம் பெறும்

# டாக்டர்கள் விபரம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கான வருடாந்த இடமாற்றத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் பலருக்கு இடமாற்ற உத்தரவுகளை கொழும்பிலுள்ள சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் இந்த இடமாற்றத்தில் இடம்பெற்றிருப்பவர்களின் விபரம் பின்வருமாறு:

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜெயன் மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு களுத்துறை அரசினர் பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் (செல்வி) எம். அற்புதநாதன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

கொழும்பு டீ சொய்சா பெண்கள் மருத்துவமனை வைத்திய அதிகாரி டாக்டர் (செல்வி) ரி குமாரசாமி வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நாவலப்பிட்டியா அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் (திருமதி) எஸ். தேவதாசன் கிளிநொச்சி அரசினர் வைத்திவசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை அரசினர்வைத்தி சாலை வைத்திய அதிகாரி டாக்டர் ரி துரைராசா நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கேகாலை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் (செல்வி) எஸ். நவசிவாயம் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாகஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புசல்லாவ அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி டாக்டர் கே. இராசேந்திரன் பளை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். பாணந்துறை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் (செல்வி) என். பரமநாதன் கோப்பாய் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி டாக்டர் (செல்வி) சி. தர்மலிங்கம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ருகம அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் (செல்வி) வி. குமாரசாமி யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் (செல்வி) வை. நவரத்தினவேல் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் (திருமதி) கே. ரவீந்திரன் ருகம அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ருகம அரசினர் வைத்தியசாலையில் கடவையாற்றும் டாக்டர் [செல்வி) சி. சிவகடாட்சம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், கொழும்பு தெற்கு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்(செல்வி) ரி. சிவயோகன் தெல்லிப்பழை அரசினர் வைத்திமசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் கே. சண்முகநாதன் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஆர். சங்கரலிங்கம் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ். ஜெயமனோகரன் காரைநகர் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் என். அருள்லிங்கம் தலைமன்னார் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சண்டலங்காவ அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம் சாவகச்சேரி வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாச்டர்(திருமதி வி. சிவபாலன் வவனியா ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் டி. சோமசுந்தரம் திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் (திருமதி ஆர். தியாகராசா அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் (திருமதி) என். இராமநாதர் காங்கேசன்துறை மார்புநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் கே. லலித்குமார் திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கொழும்பு பெரியாஸ்பத்திரியில்கடமையாற்றும் டாக்டர் (திருமதி) எஸ். மகேந்திரன் பருத்தித்துறைஆதார வைத்தியசாலைக்குஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## துணுக்காயில் ஒருவர் கொலை!

(வவனியா)

துணுக்காய் சந்தியில்வைத்து மரியான் மார்ட்டீன் எனும் (40 வயது) விவசாயி அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வாய்த்தர்க்கமே கொலையில் முடிந்தது என்று விசாரணையின்போது தெரிவிக்கப் பட்டது.

இதுசம்பந்தமாக தர்மலிங்கம், பசுபதி, பரராஜசிங்கம், உமாபதி ஆகியோர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (க)

## தீவிரவாத---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.''

''தீவிரவாத தமிழ் இளைஞர்களின் தலைவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஏனெனில் அவர்களது ஒத்துழைப்பின்றி எந்த தீர்வையும், நிலைநாட்ட முடியாது.''

''தமிழ் மக்கள் மத்தியிலுள்ள மற்றைய தமிழ் கட்சிகளான திரு சி சுந்தரலிங்கம் தலைமையிலான ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, திரு. வி. நவரத்தினம் தலைமையிலான தமிழர் சுயாட்சி கழகம், டாக்டர் எஸ். தர்மலிங்கம் தலைமையிலான தமிழ் ஈழ விடுதலை அணியையும், சர்வகட்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட வேண்டும் ''

''தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகளான ஜனதா விமுக்தி பெரமுனை, நவ லங்க சம சமாஜக் கட்சியையும், சர்வ கட்சி மாநாட்டிற்கு அழைக்க வேண்டும்.''

''சர்வகட்சி மாநாட்டில் எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வை தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரத்திற்காக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் சர்வஜனவாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் அப்படியான ஒரு தீர்வை எந்த ஒரு அரசியல் கட்சியும் தனக்குச் சாதகமாக தேர்தலில் மக்கள் முன் வைப்பதற்கு அனுமதிக்கக் கூடாது.''

''நடைபெறவிருக்கும் சகல இடைத்தேர்தல்களும், எந்த ஒரு தீர்வையும், முன் வைக்கும் சர்வஜன வாக்கெடுப்பு முடியும்வரை ஒத்திவைக்க வேண்டும் ''

இச்சந்திப்பு நேற்று முன் தினம் மாலை அரை மணிநேரம் வரை நடைபெற்றது. (க-கு)

## இப்படியும் நடக்கிறது

உங்கள் வீட்டின் கூரை எப்படி அமைந்திருக்கிறது?

ஓடா? அஸ்பெஸ்டர்ஸா?

அமெரிக்காவில் இயங்கும் கல்வி நலக்குழுவின் உயர் அதிகாரிகளின் மேற்பார்வையில் செயல்படும் மருத்துவக்குழு, பெரிய உண்மையை இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறது!

அஸ்பெஸ்டர்ஸ் கூரை உள்ள கட்டிடங்களில் வசிப்பவர்களுக்கு, நுரையீரலில் புற்றுநோய் உட்பட நுரையீரல் சம்பந்தமான நோய்கள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உண்டு என்று மேற்படி மருத்துவக்குழு தனது ஆராய்ச்சியில் தெரிவித்துள்ளது!

இதன் எதிரொலி என்ன தெரியுமா? பாடசாலைகள் உட்பட சகல கட்டிடங்களிலுமுள்ள 'அஸ்பெஸ்டர்ஸ்' கூரைகளை உடனடியாக மாற்றும்படி அமெரிக்க கல்விக்குழு இப்பொழுது உத்தரவிட்டுள்ளது!

''ஊடுருவி'

## விமானவிபத்தில் பலியான இலங்கையர் ரோமில் இன்று பலிபூசை

(யாழ்ப்பாணம்)



நைஜீரியாவில் விமான விபத்தில் பலியான யாழ்ப்பாண பொறியியலாளரானதிரு. எல். ஏ.எக்ஸ் செல்வநாயகத்தின் மறைவுகுறித்த பலிபூசை இத்தாலியில்ரோம்நகரில் இன்று நடைபெறுகிறது.

இத்தாலியிலிருந்து நைஜீரியா செல்லும் வழியில் விபத்துக்குள்ளாகி பலியான ஒரேஒரு இலங்கையரான திரு. செல்வநாயகத்தின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

நில அளவையாளரான லாஸறஸ் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான திரு. செல்வநாயகம் யாழ். சென் பற்றிக்ஸ், திருச்சி சென். யோசேப் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பழையமாணவர். (கு)

## லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

# பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சுதேச வைத்திய சபையார், யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கடந்த மாதம் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு:

முதல் வருடம்:- எஸ். விக்கினேஸ்வரி, கே புஸ்பராணி, எஸ் மல்லிகாதேவி, கே. மங்கையற்கரசி, என். யோகேஸ்வரி, கே. ஆனந்தன், கே. மீலாலஈஸ்வரி, கே. செல்வராணி, ரி. வசீகரன், கே. இரவிச்சந்திரகாந்தி, எஸ், சத்தியகுமார், கே. யோகானந்தராஜா, வி. பிரபாகரன்,

இரண்டாம் வருடம்: ஆர். ரோசாலினி, எஸ். ரேணுகாதேவி எம். தனலட்சுமி, எஸ். லோகநாதன், எம். பஞ்சரட்ணதேவி, எம். பவளராணி, ஆர். பத்மநாதன், பி. கிறிஸ்ரீன், ஏ. அன்ரோணியா, எஸ். ஜமுனா, எஸ். அருள்நேசன், எஸ். துரைசிங்கம், ஜி. சாந்தி, எம். இன்பநாதன்.

மூன்றும் வருடம்; வி. ஞானயோககாந்தன், வி. வரதலிங்கம், வி. ஜெயராஜன், ஏ. இரஞ்சிதமலா, எஸ். கலைச்செல்வி, வி. கோணேஸ்வரி, கே. நடராஜா, ஏ. வெ. விமலா ஒலின்டீனா, ஏ. அருள்லீலி, எஸ். உதயராணி, ஏ. பெனிக்னா, எஸ். ஸ்ரீஜீவகன் (வெ)

## "கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்"

(கிளிநொச்சி)

''இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு துயரங்களை அனுபவித்த மக்களை சந்திப்பதிலும் அவர்களின் குறைகளை நீக்குவதிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்'' என்று கிளிநொச்சி குருகுலத்தில்நோர்வே நாட்டைச்சேர்ந்த என் பீ ஆர். ஏ. இயக்கத்தின் நிதிஉதவியுடன் கட்டப்பட்ட பாலர் பாடசாலை கட்டிடத்தின் திறப்புவிழா வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரஸ்தாப இயக்கப்பிரதிநிதி திரு. மார்சின் கூறினார்.

குருகுல இயக்குநர் சபையாகிய கரைச்சிசைவ வித்தியா விருத்திச்சங்கத் தலைவரும், நீர்பாசனப் பொறியியலாளருமான திரு. க. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட என். பி. ஆர். ஏ. இயக்கபிரதிநிதிகளான செல்வி சிரி, வொயின் மார்சின் தம்பதிகள் பாலர் பாடசாலை கட்டிடத்தை திறந்துவைத்தனர்.

குருகுல இயக்குனர் சபைச் செயலாளர் திரு. நடராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து குருகுலநிர்வாகி திரு. வே கதிரவேலு உரையாற்றுகையில்,

''எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியில்குருகுலத்தை வளர்ச்சி அடையச் செய்துள்ளோம். இதன் பயனை இன்று ஏராளமான அநாதைப்பிள்ளைகள் அனுபவிக்கின்றனர். இது போன்ற ஸ்தாபனங்கள் நமது பகுதிகளில் மேலும் உருவாக வேண்டும். இதற்குச்சேவை மனம் கொண்ட பெருமக்கள் உதவவேண்டும். ''இன்று திறக்கப்படும் பாடசாலை பாலர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக முன்னேற்றம் காணப்பாடுபடும். இன்றைய பாலர்கள்தான் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற தலைவர்களாக உருவாகக் கூடியவர்கள்'' என்றார்.

குருகுல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வெ)

## இலவச பால்மா விநியோகம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வசதியற்ற குடும்பங்களிலுள்ள ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இம்மாதம் முதல் இலவச பால்மா விநியோகிக்கப்படவுள்ளது.

இப்பால்மா விநியோகம் ஒவ்வொரு உப அலுவலகத்திலும் நடைபெறும்.

கிராமசேவை அலுவலரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் வருபவர்களுக்கே பால்மா விநியோகிக்கப்படவுள்ளது

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box, 49,Telephone, 22389 — 24126.